1992 மார்ச் 9]

ஸ்கீம் என்ற அளவிலே இந்தத் திட்டத்திலே சேர்த்து இருக்கிறோம். ஆகவேதான், அந்த ஒப்புதல் வந்தவுடன் இந்த வேலை ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் ; இந்த அவைக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 130 திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

130—

மலட்டாற்றில் ஓடுபாலங்கள் கட்டும் திட்டம்.

*5178—திரு. வ. சத்தியமூர்த்தி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடிக்கு அருகிலுள்ள கொம்பூதிச்சாலை மற்றும் எம். கரிசல்குளம் சாலையை குறுக்கிடும் மலட்டாற்றில் இரண்டு ஓடுபாலங்கள் கட்ட செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு தமிழக அரசினுடைய பகுதி—2 திட்டத்திற்கு அங்கிருந்து எடுத்து கருத்துரு அனுப்பப்பட்டு, நிதிநிலை பற்றாக்குறையின் காரணமாக நிலுவையில் போடப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் பொதுமக்கள் பிரதிநிதி ஒரு திட்டத்தைப் புதுப்பித்து அரசுக்கு அனுப்புவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ள இயலாது. ஆகவே ஒரு ஆண்டு பகுதி—2 திட்டத்திற்கு இந்தத் திட்டத்திற்குக் கருத்துரு அனுப்பப்பட்டு, ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்று சொன்னால் மறு ஆண்டுக்கு அந்த திட்டத்தைத் துறையே தன்னிச்சையாக, தானே பரிந்துரை செய்வதால்தான் அந்தக் காரியங்கள் நடைபெற

இயலும். ஆகவே, இப்படியொரு திட்டம் இல்லை; கேள்விக்கு இடமில்லை என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டு வர விரும்புகிறேன். 1947-லிருந்து 67 வரையில் இந்தக் கடலாடி தொகுதி—தேவர் திருமகன் தொகுதியாக இருந்து, அவர் வாய்ப் பூட்டுச் சட்டத்திற்கு உட்பட்டு, அரசுக்கு கோரிக்கை வைக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்ட பகுதி. ஒரு 10, 20 கிராமங்களுக்கு ஐந்து கிலோமீட்டர் தொலைவில் அடையக்கூடிய துாரத்தை அறுபது கிலோமீட்டர் சுற்றித்தான் சென்று இன்றையத்தினம் அடைய வேண்டிய அவல நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்வி போட வேண்டும்.

திரு. வ. சத்தியமூர்த்தி: ஆகவே, இந்தப் பாலத்தின் குறுக்கே ஒரு பாலம் சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டினால், 50 கிலோமீட்டர் சுற்றாமல் 5 கிலோமீட்டர் தொலைவிலேயே சென்று வரக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஆண்டு இல்லை என்றாலும், அடுத்த ஆண்டு இதற்கு ஒரு கருத்துரு பெற ஆணை பிறப்பிப் பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடலாடித் தொகுதியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கடலாடி தொகுதிக்குத்தான் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, வெகுநாட்களாகக் கிடப்பிலே கிடந்த, ஏறத்தாழ 18 கோடி ரூபாய் அளவிலேயுள்ள மலட்டாறு அணைக்கட்டுத் திட்டத்தைத் தந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, கடலாடித் தொகுதிக்கு அதிகமான சலுகை தரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சத்திய மூர்த்தி அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலே, அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற இரண்டு பாலங்களும் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பாலங்களாகும். ஒன்று, கடலாடி—எம். கரிசல் குளம் சாலையில் ஒரு குழாய் பாலம் அமைத்தல்; இன்னொன்று, கொம்பூதி—கடலாடிச் சாலையில் ஒரு தாம்போகி கட்டுதல். இந்த இரண்டு பாலங்களுக்கும் முதல் பாலத்திற்கு 100 மீட்டர் நீளத்திற்கு கட்ட வேண்டியிருக்கிறது. ஏறத்தாழ, 35 லட்சம்

1992 மார்ச் 9]

ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாவது பாலத்திற்கும் 100 கிலோ மீட்டர் நீளத்திற்கும் 35 லட்சம் ரூபாய் செலவில் ஒரு தாம்போகி கட்ட மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியச் சாலையையும் இப்படி எடுத்துக் கொண்டால், 35 லட்சம் ரூபாய் என்று எடுத்துக் கொண்டால், அதற்கான நிதியாதாரங்களுக்கு வாய்ப்பு இல்லை. எனவேதான், வருகிற தேவைகளைக் கருதி, இருக்கிற நிலைமைகளைக் கருதி, அங்கே இருக்கிற பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, எவ்வெவற்றிற்கு முக்கியத்துவம் முதலிலே கொடுக்க வேண்டுமோ அவ்வவற்றிற்குக் கொடுத்து, அப்படிப்பட்ட நிலைமைகளை தமிழகம் முழுவதும் எடுத்துக் கொண்டு வருகிறோம். ஆகவே, உறுப்பினர் குறிப்பிட்ட சாலைகளின் முக்கியத்துவத்தைக் கருதி, இது சம்பந்தமான பிரச்சினைகளைப் பரிசீலித்து, நிதியாதாரத்திற்கேற்ப அடுத்த ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 131, திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

131—

கீழ்ஒரத்தூர் கிராமத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*1295 திரு. ச. புரட்சிமணி:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில், கீழ் ஒரத்தூர் என்ற கிராமத்திற்கு கூட்டுக்குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் உள்ள கீழ் ஒரத்தூர் கிராமம், மங்களூர் மற்றும் 24 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஆய்வில் உள்ளது.

திரு. ச. புரட்சிமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.